Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்~08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி -28 | 13-07-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 145




## கடற்படையால் மூழ்கடிக்கப்பட்ட கப்பலில் இருந்த 11 விடுதலைப்புலிகள் உட்பட 12 பேர் வீரச்சாவு

கடந்த 14.06.2003 அன்று சர்வதேசக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படை விடுதலைப்புலிகளின் வணிகக்கப்பலைத் தாக்கியழித்தபோது 11 புலிகள் உட்பட 12 பேர் வீரச்சாவடைந்தனர். வீரச்சாவடைந்த 12 பேரினதும் விபரம் வருமாறு

* லெப்.கேணல். அன்புக்குமரன் (வல்லிபுரம் சிவகுமார் சிறிதரன் வீதி, ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம். த.மு:- 5ஆம் வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு)

* லெப்.கேணல் செந்தமிழ்/ வீரமணி ( சின்னராசா சிவரூபன் முள்ளியான், வெற்றிலைக்கேணி, வடமராட்சி கிழக்கு)

* லெப். கேணல். கதிர் (செல்வரட்ணம் சசிந்திரன் மீசாலை தெற்கு, சாவகச்சேரி, யாழ்ப்பாணம். த.மு:- செ.திருமகள் தியேட்டர் அருகில் வவுனிக்குளம்.)

* லெப்.கேணல் கஜேந்திரன் (நல்லையாகிருஷ்ணன் கமில்தினேஸ் இல.59,60,டி6, கிளிநொச்சி.த.மு:- இல13, ஆனந்தநகர், கிளிநொச்சி.

* மேஜர். நிர்மலன் (ரணராஜா ரகுநாத் நெடியகாடு தெற்குவீதி, வல்வெட்டித்துறை,த.மு.பாரதிபுரம், 13ஆம் கட்டை றெட்பான விசுவமடு.)

* மேஜர்.கன்னியநாடன் (பொன்னம்பலம் கிருபாகரன் பேராலை, பளை த.மு.5ஆம் யூனிற், இராமநாபுரம், வட்டக்கச்சி.)

* மேஜர்.வள்ளுவன் (துரைசைலேஸ்வரன் மயிலங்காடு, ஏழாலைதெற்கு, யாழ்ப்பாணம்,த.மு.மங்கை குடியிருப்பு, மல்லாவி.)

(08ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

நேற்று முன்தினம் முல்லை மாவட்டத்தில் தவறுதலான துப்பாக்கிச் சூட்டின் போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார். வீரவேங்கை தமிழ் ஊரான் (இரத்தினம் சிவசங்கர், டாக்டர். சுப்பிரமணியம் வீதி, மல்லாகம், யாழ்ப்பாணம் த.மு: கொடிகாமம் வீதி, கச்சாய் யாழ்ப்பாணம்) என்னும் போராளியே சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## எங்கள் தந்தையைக் கொலை செய்த ஜே.வி.பி. யுடன் கூட்டணி வேண்டாம்

### சந்திரிகாவின் பிள்ளைகள் தாயாரிடம் வலியுறுத்து

(கொழும்பு)

**தங்களின் தந்தையைக் கொலைசெய்த ஜே.வி.பி. யோடு கூட்டணி வைத்துக்கொள்ள வேண்டாமென சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு அவரது பிள்ளைகள் அழுத்தம் கொடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

தங்களது தந்தையைக்கொலை செய்தவர்களோடு எவ்வித உறவையும் ஏற்படுத்த வேண்டாம் என்று அவர்கள் சனாதிபதியான தாயாரை வலியுறுத்தி வருகின்றனர்.

இச்செய்தி இணையத்தளம் ஒன்றில் வெளியாகியுள்ளது. இதை சனாதிபதியே பலரிடமும் தெரிவித்துள்ளதாகவும் அந்த இணையத்தள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை பொ.ஐ.முன்னணிக்கும் ஜே.வி.பி. க்குமிடையிலான பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை, முன்னேற்றம் குறித்து இருதரப்பினரும் கருத்து வெளியிடுவதைத் தவிர்த்து வருகின்றனர்.

இதனிடையே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைத் தனிப்பட்ட முறையில் சந்திக்க ஜே.வி.பி. மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்துள்ளதாகவும் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

தன்னை கட்சியின் தலைவியாகவே சந்திக்க முடியும் என்று சனாதிபதி சந்திரிகா சந்திக்க முற்பட்ட ஜே.வி.பி. யினருக்குக் கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஜப்பான் பிரதி வெளிநாட்டமைச்சர் இம் மாதம் சிறிலங்கா விஜயம்

(லண்டன்)

ஜப்பானின் பிரதி வெளிநாட்டமைச்சரான ஜஸ்புறோஜனோ இம் மாதம் இறுதியில் சிறிலங்காவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் நோக்கிலேயே அவர் விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜஸ்புறோஜனோ கொழும்பில் தங்கி நிற்கும் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் முக்கிய அமைச்சர்கள் சிலரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

### நாவாந்துறையிலிருந்து காக்கைதீவுவரை

## நெருக்கமாக காவலரண்கள் படையினரால் அமைப்பு

நாவாந்துறையிலிருந்து காக்கைதீவு வரையான கடற்கரைப் பகுதிகளைப் படையினர் பலப்படுத்தி வருகின்றனர்.

இவ்வளவு காலமாக 75 மீற்றர் இடைவெளியில் காவலரண்கள் அமைத்தனர். ஆனால் தற்போது 10 மீற்றருக்கு ஒரு காவலரண் வீதம் நெருக்கமாக அமைத்து வருகின்றனர். கடந்த சில நாட்களாக உலங்கு வானூர்திகள் இப்பகுதிகளில் வேவு நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (33)

## பாராளு. செல்லும் உறுப்பினர்கள் மீது உடற்பரிசோதனைக்கு உத்தரவு

### பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா விடுத்தார்

பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் உடற்பரிசோதனைக்கு உட்படுத்தும்படி பாராளுமன்ற காவல் கடமையில் இருக்கும் அனைத்துப் பொலிஸ் அதிகாரிகளையும் சிறிலங்கா பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா பணித்துள்ளார்.

சபாநாயகர் ஜோசெப் மைக்கல் பெரேராவின் கோரிக்கைக்கு இணங்கவே இவ்வாறு அவர் பணித்துள்ளார். பாராளுமன்றத்தின் பாதுகாப்பிற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் மரணச்சடங்கொன்றை நடத்தியதையடுத்து பாராளுமன்றத்தின் பாதுகாப்புக் கருதி இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்போதுபாராளுமன்ற உறுப்பினர்கள், இம்மரணச்

(08ஆம் பக்கம் பார்க்க)

## நயினை நாகபூசணி அம்மன் ஆலய சம்பவம்

## கண்காணிப்புக்குழு விசாரணை படைத்தரப்பு மௌனம் சாதிப்பு

நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்திற்குச் சென்ற பக்தர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் அங்கு சென்று சம்பந்தப்பட்ட படைத்தரப்பினரிடம் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளனர். அப்போது படையினர் மௌனம் சாதித்துள்ளதாகவும் பொதுமக்களின் சாட்சியங்கள் உண்மையை வெளிப்படுத்தியுள்ளதாகவும் தெரிய வருகிறது. இன்று நடைபெறவுள்ள தீர்த்தத் திருவிழாவின் போது போர் நிறுத்த கண்காணிப்புக்குழு தனது பணியை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

### உருவப்படம் இணைப்பு

சர்வதேச கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையால் விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட போது வீரச்சாவடைந்தோரின் உருவப்படங்கள் இன்றைய தினசரியுடன் இணைக்கப்பட்டுள்ளன.

## கொழும்பில் 24 மணி நேர தேடுதலில் எண்பத்திரண்டு பேர் கைதாகினர்

கொழும்பில் நேற்றுமுன்தினம் காலைமுதல் நேற்றுக்காலைவரை பொலிசாரும் இராணுவத்தினரும் கூட்டாக நடத்திய தேடுதல் நடவடிக்கையில் 82 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இத்தகவலை கொழும்புப் பகுதி பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். பாதாள உலகக் கோஷ்டியினரை இலக்கு வைத்தே இத்தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்ப

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஆரோக்கியமான நாளைய சமூகம் மாணவர்களின் கைகளிலேயே உள்ளது

### மூத்த தளபதி கேணல் கருணா

"மாணவர் சமூகத்தினர் எதிர்கால சிற்பிகள்" ஆரோக்கியமான நாளைய சமூகம் அவர்களின் கைகளில் தான் உள்ளதென மூத்த தளபதி கேணல் கருணா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கிரான் தேனகம் விடுதியில் நேற்று கல்வித்துறைசார்ந்தோர் மத்தியில் கருத்து தெரிவிக்கும்போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் அவர் உரைநிகழ்த்துகையில் மாணவர்களின் ஒழுக்கங்களைப் பேணுவதில் ஆசிரிய சமூகத்தினர் கூடிய கவனம் எடுக்கவேண்டும். ஒழுங்கற்ற நடவடிக்கைகளில் மாணவர்களை ஈடுபடுத்த முயலும் சில தீய சக்திகளின் செயற்பாடுகளைக் கல்வித்துறை சார்ந்தோர் இனங்கண்டுகொள்ள வேண்டும். ஒழுங்கற்ற நடவடிக்கைகளில் மாணவர்களை ஈடுபடுத்த முயலும் சக்திகளுக்கு எதிராக மட்டுமல்லாது எமது பௌதீகவளங்களை நன்கு அறிந்து அறிவுள்ள சமுதாயமாகவும் மாணவர்களை கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெறக் கூடியவர்களாகவும் மாற்றும் சக்தி ஆசிரியர்களுக்கு மட்டுமே உண்டு. மாணவர்களது கல்வியிலும் ஒழுங்கு நடவடிக்கைகளிலும் ஆசிரியர்கள் மிகுந்த கவனத்துடன் செயற்பட வேண்டும். இன்றைய

(08ஆம் பக்கம் பார்க்க)

## பரணிதரன் கொலை தொடர்பாக புளொட் உறுப்பினர் தேடப்படுகிறார்

### சிறிலங்காப் பொலிசார் அறிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் வேலுப்பிள்ளை பரணிதரன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக புளொட் உறுப்பினர் ஒருவர் தேடப்பட்டுவருவதாக சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு முகாம் பகுதியிலிருந்து பரணிதரனைப் பின் தொடர்ந்து வந்த புளொட் உறுப்பினரே பரணிதரன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக இறந்தவருடன் கூடச் சென்றவர் பொலிசாருக்குத் தெரிவித்துள்ளார். அந்த புளொட் உறுப்பினரைத் தன்னால் அடையாளம் காட்டமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வட - கிழக்கு மாகாண தமிழ்மொழித்தின எழுத்தாக்கல் போட்டிகள் நாளை

வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் மொழித்தின எழுத்தாக்கல்' போட்டிகள் சகல மாவட்டங்களிலும் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளன. அந்தந்த மாவட்டங்களிலுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் நடைபெறவுள்ள இவ் எழுத்தாக்கப் போட்டிகள் மூலம் மாவட்ட மற்றும் மாகாண மட்டத் தெரிவுகள் நடைபெறவுள்ளன. முல்லைத்தீவுப் பாடசாலைகளுக்கான எழுத்தாக்கப் போட்டிகள் முல்லை. மாங்குளம் மகாவித்தியாலயத்திலும், கிளிநொச்சி மாவட்ட மட்டப் போட்டிகள் கிளி.கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலும் நடைபெறும். போட்டியாளர்கள் நாளை மு.ப 9.00 மணிக்கு முன்னர் மண்டபத்துக்கு சமுகமளிக்க வேண்டுமென மாகாணக் கல்வித் திணைக்கள தமிழ்மொழித்தின நிகழ்ச்சிப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். அத்தினத்தில் ஏனைய கலைத்திறன் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளோர் பெயர்ப்பட்டியலைத் தவறாது சமர்ப்பிக்குமாறு மாவட்ட மட்ட தமிழ்மொழித்தின ஒழுங்கமைப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இம்முறை மாகாண மட்ட தமிழ்மொழித் தின இறுதிப் போட்டிகள் எதிர்வரும் 25, 26, 27ம் திகதிகளில் யாழ். மாவட்டத்தில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக மாகாண கல்வித் திணைக்கள உதவிக் கல்விப்பணிப்பாளர் செ.மகேஸ் தெரிவித்துள்ளார்.

## கண்ணிவெடி விழிப்புணர்வு

பூநகரி பள்ளிக்குடாவில் கண்ணிவெடி சம்பந்தமான கருத்தரங்கு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு கிராம அபிவிருத்திச்சங்கச் செயலாளர் தலைமை தாங்கினார். இக்கருத்தரங்கில் கண்ணிவெடி சம்பந்தமான விளக்கம் கொடுக்கப்பட்டதுடன் அது சம்பந்தமான துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டன. இக்கருத்தரங்கின் மூலம் கௌதாரிமுனை, வினாசியோடை, கல்முனை, பரமன்கிராய் ஆகிய இடங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் பயன்பெற்றனர். (34)


## கண்ணீரில் கரைந்த முதலாம் ஆண்டு நினைவில்

திதி: 13.07.2003

மலர்வு 03 □ 12 □ 1937



உதிர்வு 24 □ 06 □ 2002

**திருமதி.ஆனந்தராசா தெய்வநாயகி**
(வட்டுக்கோட்டை)

எளிமையின் நாயகியே
பொறுமையின் இலக்கணமே
நாம் வாழ்வில் உயர
படிக்கட்டாய் நின்ற பத்தினியே
ஏங்குதே எம் நெஞ்சங்கள்
எம் உயிரில் கலந்த உறவே
போற்றுகின்றோம் அம்மா.

**182, அதிசய விநாயகர் கோவிலடி, விசுவமடு.** (3442) **என்றும் மறவா குடும்பத்தினர்.**

## துயர் பகிர்கின்றோம்

## செல்வி. கைலாயபிள்ளை விஜயலட்சுமி

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர் செல்வி. விஜயலட்சுமி கையிலாயபிள்ளை அவர்களின் திடீர் மறைவினால் ஆழ்ந்த துயரும், மனவேதனையும் அடைகின்றோம். அன்னாரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

(சி-8417) **துணுக்காய் கல்விவலய அதிபர்கள் சமூகம்.**

## ஒரு கொடியில் பூத்த இரு மலர்கள்

45 ஆம் நாள் நினைவு நாள் | 5ஆம் ஆண்டு நினைவுடன்



தாயின்மடியில் ◀12-03-1981 10-09-1982▶

தாயகமண்ணில் ◀30-05-2003 08-06-1998▶



**வீரவேங்கை-கனிமொழி** (விக்கினேஸ்வரன்-விஜிதா) **வீரவேங்கை-கிளிமொழி** (விக்கினேஸ்வரன்-விஜிமலர்)

*எம் வீட்டின் குல விளக்குகளே!*
*எம் வானத்தின் விடிவெள்ளிகளே!*
*நீங்கள் ஒரு கொடியில் பூத்த -இரு மலர்கள்*
*நீங்கள் சுதந்திர வீராங்கனைகள்*
*நாங்கள் துயரத்தின் உறவுகள்*
*எம்மைப் பரிதவிக்க-விட்டுப்*
*பறந்து விட்டீர்களே!*
*எத்தனை ஆண்டுகள் சென்றாலும்-நாம்*
*உயிர் வாழும்வரை கண்ணீருடன்....*

13-07-2003 இன்று எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறும் 45 ஆம் நாள் நினைவு நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், சக போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**த. முகவரி:**
**683, விநாயகபுரம், துணுக்காய்.** குடும்பத்தினர் (3440)

## கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்

## அமரர் செல்வி. கைலாயபிள்ளை விஜயலட்சுமி

**(அதிபர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்)**

வன்னியின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பல ஆண்டுகளாக அர்ப்பணிப்புடனும், தேசப்பற்றுடனும் கடமையாற்றிய இவர், மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பா.இல் அதிபராகக் கடமை புரிந்த வேளையில் அப்பிரதேசத்தை ஆக்கிரமிக்கும் நோக்குடன் சிங்களப்படைகள் "ரிவிபல" இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. இவ்வேளையில் தனது உயிரையும் பொருட்படுத்தாது துணிச்சலுடன் பாடசாலைச் சொத்துக்களை அப்புறப்படுத்திப் பாதுகாத்தார்.

மீண்டும் இப்பாடசாலை தனது சொந்த இடத்திற்கு சென்ற வேளையில் மிகவும் உற்சாகமாகச் சென்று அப்பாடசாலையை மீண்டும் நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்கு அல்லும் பகலும் செயற்பட்டவர். துணுக்காய் வலயத்தில் ஏற்பட்ட ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் வெற்றிடம் நிரப்பும் பொருட்டு அப்பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டார். எனினும், எதையும் திறமையாகவும், செம்மையாகவும் செய்ய வேண்டும் என்ற பெருவிருப்புடன் செயற்படும் இவர் நீண்ட தூரத்தில் இருந்து அப்பணிக்கு சென்றுவருவது தனது எதிர்பார்ப்பிற்கு அமைய செயற்பட முடியாதுள்ளது எனக் கூறி மீண்டும் ஒட்டுசுட்டான் ம.வி.இன் அதிபர் பொறுப்பை ஏற்று அப்பாடசாலையை உன்னத நிலைக்குக் கொண்டு வருவதற்காகப் பெற்றோர், பழைய மாணவர், ஆசிரியர்கள் என அனைத்துத் தரப்பினரையும் அணுகி அன்பாகப் பேசி அவர்களின் ஒத்துழைப்புடன் அயராது உழைத்து வந்தவர்.

கடந்த 09.07.2003 அன்று இவர் அகாலச் சாவடைந்த செய்தி எம்மையெல்லாம் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. எந்நேரமும் கல்விச் செயற்பாட்டில் அக்கறையுடன் செயற்பட்ட இவரை கல்விச் சமூகம் என்றென்றும் நினைவில்கொள்ளும் அதேவேளை, இவருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதோடு இவரின் பிரிவால் துயருறும் உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

**தமிழீழ கல்விக் கழகம்,**
**தமிழீழ விடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்பு,**
**தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை.**

(சி-8227)


## 14.07.2003 - 21.07.2003 வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்களின் முன்மொழிவுகள்

14.07.2003 காலை 10.00 மணிக்கு புதிதாக அமைக்கப்பட்ட பரந்தன் சந்தைக் கொட்டகை திறப்புவிழா செய்தலும் வியாபாரத்தினை ஆரம்பித்து வைத்தலும். மாலை 2.00 மணிக்கு வட்டக்கச்சிப் பிரதேச தூயமணி முன்பள்ளி மாணவர்களின் திறனாய்வு விழா.

15.07.2003 நூலக ஆயுர்வேத மூலிகைக் கண்காட்சி கிளி/சந்திரன் பூங்கா.

16.07.2003 உள்ளூராட்சி வார விழா கிளி/சந்திரன் பூங்கா.

- □ விருந்தினர் உரை.
- □ முன்பள்ளிச் சிறார்கள்/ பாடசாலை மாணவர்கள் ஆகியோரின் கலை நிகழ்வுகள்.
- □ மூதாளர் பேணலக முதியோர்க்குச் சத்துணவு விநியோகம்.
- □ பரிசளிப்பு நிகழ்வுகள்.

17.07.2003 வட்டக்கச்சி மம்மில் மயானம், திருநகர் மயானம், தருமபுரம் பொதுச்சந்தை, முரசுமோட்டைச் சந்தை ஆகியன சிரமதானம்.

18.07.2003 மரம் நாட்டு விழா.

- □ கிளி/பொழுதுபோக்கு வலயம்.
- □ கிளி/பொது விளையாட்டு மைதானம்.
- □ கிளி/பழைய சந்தைக் காணி.
- □ முரசுமோட்டை உப அலுவலகம் க.பி.ச.

19.07.2003 சிரமதானம்.

- □ அக்கராயன் மயானம்.
- □ கந்தபுரம் சந்தை.

20.07.2003 சிரமதானம்.

- □ கிளி/பொதுச்சந்தை.
- □ கிளி/பஸ்தரிப்பு நிலையம்.
- □ கண்டி வீதி.

21.07.2003 பரந்தன் பொதுச் சந்தைக்கிணறு, சந்திரன் பூங்கா கிணறு ஆகியன இறைத்துச் சுத்தம் செய்தல்.

**செயலாளர்,**
**கரைச்சிப் பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(சி-8228)

# ஈராக்கில் படையினர் சந்திக்கும் நெருக்கடி; அமெரிக்க மக்களிடையே பெரும் அதிருப்தி!

**ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தின் மீது தொடர்ந்தும் தாக்குதல்கள் நடத்தப்படுவதையிட்டு அமெரிக்க மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். எ.பி.சி.செய்தித்தாபனம் நடத்திய புதிய கருத்துக் கணிப்பின் அடிப்படையில் இது தெரியவந்துள்ளது.**

அமெரிக்க வீரர்கள் மீது ஈராக்கில் தொடர்ந்தும் தாக்குதல்கள் நடத்தப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அமெரிக்க மக்கள் தெரிவித்துள்ளனர்.


இம்மாதம் 9ஆம், 10ஆம் திகதிகளில் இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

ஈராக்கிய யுத்தத்தை சனாதிபதி புஷ் நடத்திய விதம் யுத்தம் நடத்தப்பட வேண்டும் என்பதற்காக ஆதாரமாக உளவு அறியும் செய்திகள், சதாமின் வீழ்ச்சிக்குப் பின்னர் பாக்தாத்தில் அதிகரித்து வரும் அமெரிக்க வீரர்களின் இறப்பு என்பவை தொடர்பாகக் கருத்துக் கணிப்பு நடைபெற்றது.

52 சதவீதமானோர் ஈராக்கில் அமெரிக்க இராணுவம் கொல்லப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளனர். அதேசமயம் யுத்தத்தை ஆதாரப்படுத்துவதற்காக யுத்தம் பற்றிய தகவல்கள் மிகைப்படுத்தப்பட்டுக் கூறப்பட்டுள்ளன என்று 50 சதவீதமானோர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# சமபலமே தீர்வு -முஷாரப்

இந்தியா-பாகிஸ்தான் இடையில் மரபு ரீதியான மற்றும் நவீன-ஆயுதங்களில் சமபல நிலைமை நிலவினால் தான் இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லாப் பிரச்சினைகளுக்கும் சுமுகமான தீர்வுகாண முடியும் என்று பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் இஸ்லாமாபாத்தில் கூறியுள்ளார்.



லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டும் 298 பேர் பலியாகியும் உள்ள சீனாவின் அனுய் மாகாண வெள்ளப் பெருக்கு சம்பவத்தின் போது ''ஹவாய்'' ஆற்று வெள்ளத்தைக் கட்டுப்படுத்திவிட்டு உணவு வழங்கலில் ஈடுபட்டுள்ள இராணுவம்.


# அதிகளவிலான ஆயுதங்கள் அமெரிக்காவில் புழக்கம்!

உலக நாடுகளில் அமெரிக்காவிலேயே அதிகமாக ஆயுதங்கள் உள்ளதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

சிறு ஆயுதங்களின் தாராள பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவது தொடர்பான 'ஐ.நா.தீர்மானம எந்த அளவிற்கு அமுல்படுத்தப்படுகின்றது என்பதை ஆராயும் கூட்டம் ஐநாவையில் இடம் பெற்ற வேளையில் மேற்கண்ட ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

ஆபிரிக்க நாடுகள் மற்றும் ஆப்கானிஸ்தானில் தான் ஆயுதங்கள் பெருமளவில் உள்ளதாகக் கூறப்பட்டது. ஆனால் தற்போதைய தகவலின்படி ஐரோப்பிய நாடுகளில அதிகளவில் ஆயுதங்கள் புழக்கத்தில் இருப்பது ஆச்சிய மளிக்கிறது.

மேலும் சிறு ஆயுதங்களில் 70 சதவீதம் அமெரிக்கா மற்றும் ரஷ்யாவில் தயாரிக்கப்படுகின்றன.



வட இஸ்ரேலிய நகரான டிலேரியாசில் 32 வயதுப் பெண் சாப்பிடும் போது தற்செயலாக விழுங்கிய கரண்டி எக்ஸ்ரே படம் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

# ஆப்கான் சிறைச்சாலைகளில் கைதிகள் மிக மோசமாக நடத்தப்படுகின்றனர்!

## -சர்வதேச பொது மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் சித்திரவதைப்படுத்தப்பட்டு பாலியல் பலாத்காரங்களுக்கு உட்படுத்தப்படுவதாக சர்வதேச பொது மன்னிப்பு அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

சர்வதேச பொது மன்னிப்பு அமைப்பின் பொதுச் செயலாளர் ஜரினேகான் காபூலில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் இதனைக் கூறினார்.

ஆப்கானில் உள்ள அனைத்துச் சிறைகளிலும் அடைக்கப்பட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் மோசமாக நடத்தப்படுகின்றனர். சுதந்திரம் தடை செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களது தனிமனித கௌரவமும் பாதிக்கப்பட்டுள்ளது. நெரிசல் மிகுந்த சிறைகளில் பல கைதிகள் கைகளில் விலங்கிடப்பட்ட நிலையில் உணவு இல்லாமல் நித்திரையின்றி சுகாதாரமற்ற சூழலில அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 20 ஆண்டுகளாக நடந்த போரினால் ஆப்கானின் சட்ட அமைப்புக்கள் குலைந்து போயுள்ளன. சர்வதேச சமுதாயம் மற்றும் நீண்ட நாள் உதவிகள் இல்லாமல் ஆப்கான் அரசால் இவற்றைச் சீராக்க முடியாது. காபூல் மட்டுமன்றி நாடுபூராவும் உள்ள சிறைகள் சீரமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# பொடோ அமுலாக்கத்தை ஆய்வு செய்யும் குழு நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை

## தி.மு.க. தலைவர் கருணாநிதி குற்றச்சாட்டு

(சென்னை)

பொடோ சட்டத்தின் அமுலாக்கத்தினை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட குழு நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி குறை கூறியுள்ளார்.

ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ பொடோ சட்டத்தின் கீழ் ஓராண்டாகச் சிறையில் வைக்கப்பட்டிருப்பதனைக் கண்டித்துச் சென்னையில நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரை யாற்றிய அவர் மத்திய அரசுக்குத் தெரிந்த பாசை மௌனபாசையாகத்தான் இருக்கிறது என்றார்.

பொடோ சட்டத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட்டுள்ள வைகோவும் மற்றவர்களும் வெளியே வரவேண்டும். இல்லாவிட்டால் வெளியே யார் வருவார்கள் என்று தெரியாது என்றும் கருணாநிதி கூறினார்.

பஞ்சாப் மாநில முன்னாள் பிரதமர் பிரகாசின் வீட்டில் சோதனை நடத்துவதைச் சகித்துக் கொள்ள முடியவில்லை என்று கூறும் துணைப் பிரதமர் அத்வானி தமிழகத்தில் நடப்பதை எவ்வாறு சகித்துக் கொள்கிறார் என்றும் கேள்வி எழுப்பினார்.


இக் கூட்டத்தில் ம.தி.மு.க. அவைத் தலைவர் எல்.கணேசன், மத்திய அமைச்சர் எம்.கண்ணப்பன் துணைப் பொதுச் செயலாளர் செஞ்ஜி ராமச்சந்திரன் உட்படப் பலர் பேசினர்.

# அத்வானியின் நம்பிக்கை!

(புதுடில்லி)

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை இந்தியா தமது சொந்தப் பலத்தாலேயே வெற்றி கொள்ளும் என்று இந்திய துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி தெரிவித்துள்ளார். சண்டிகரில் நடைபெறும் வடமாநில பாரதிய ஜனதாக் கட்சி எம்.எல்.ஏக்கள் பயிற்சி முகாமில் நேற்று முன்தினம் அவர் உரை நிகழ்த்தினார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பாகிஸ்தானின் ஐ.எல்.ஐ ஆதரவுடன் இயங்கி வந்த 200 பயங்கரவாத முகாங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.




பிலிசி நாட்டில் மல்யுத்தப் போட்டிக்குத் தயாராகும் 4 வயதும் 56 கிலோகிராம் எடையுடையவனும் ஆகிய சிறுவன்.

# இருவர் கைது!

(சென்னை)

தமிழக முன்னாள் அமைச்சர் ப.கிருட்டினன் கொலை வழக்குத் தொடர்பாக மேலும் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்று முன்தினம் மதுரையில் குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு இம்மாதம் 5ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர்.

மேற்படி நபரின் கொலை தொடர்பாக தி.மு.க தலைவரின் மகன் மு.க.அழகிரி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இந்திய ஸ்ரீநகர் வான் பரப்பில் நாட்டின் தேசியக் கொடியை நினைவுபடுத்தும் வகையில் (நிறங்களின் வரிசைப்படி) விமானத்தின் புகைச் சுவடுகள்

# சோனியா வெளிநாட்டவரென்ற பிரச்சினையால் கவலையில்லை!

## -காங்கிரஸ் அறிவிப்பு

(புதுடில்லி)

வரவிருக்கும் மக்களவைத் தேர்தலின் போது காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி வெளிநாட்டவர் என்ற பிரச்சினையைப் பாரதிய ஜனதாக் கட்சி எழுப்புமே யானால அது பற்றிக் காங்கிரஸ் கவலை கொள்ளாது என்று அக்கட்சியின செய்தித் தொடர்பாளர் ஜெயப்பால் ரெட்டி கூறியிருக்கிறார்.

சோனியாகாந்தி வெளிநாட்டவா என்ற பிரச்சினையை பாரதிய ஜனதாக் கட்சி எழுப்பக்கூடும் என்று வெளியான செய்தி பற்றி செய்தியாளர்கள் புதுடில்லியில் நேற்று முன்தினம் அவரிடம் கருத்துக் கேட்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார். 1988 ஆம் ஆண்டிலிருந்து காங்கிரஸ் சோனியா காந்தியை பிரதமராக முன்நிறுத்தி வந்துள்ளது என்றும் காங்கிரஸ் மேற்கொள்ளவிருக்கும் தேர்தல் கூட்டணி பி.ஜே.பி. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து பல்வேறு குணாம்சங்களில் மாறுபட்டதாக இருக்கும் என்றும் கூறினார்.




-ஜெயந்திரன்

# பயிற்சிக் களமாக

# கனிஷ்ட பிரிவு உதைபந்தாட்டப் போட்டி:

தமிழீழ விளையாட்டுத் துறையால் தேசிய ரீதியில் நடாத்தப்படும் கனிஷ்ட பிரிவுகளுக்கான மேஜர் முரளி ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி கிளிநொச்சியில் கடந்த 10ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.





சுவிஸ் வாழ் தமிழர்களின் தாயக உதைபந்தாட்ட சுற்றுலாப்போட்டியாக விளங்கும் இச்சுற்றுப் போட்டி கிளி. பொது விளையாட்டு மைதானத்திலும், கனகபுரம் விளையாட்டு மைதானத்திலும் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொருமாவட்டத்தில் இருந்தும் 13,15, 17,19 வயதுக்கு உட்பட்ட பிரிவுகள் இச் சுற்றுப்போட்டியில் கலந்துகொள்வதுடன் சுவிஸ் தமிழர் அணியில் இருந்தும் மேற்படி நான்கு பிரிவுகளும் கலந்துகொள்கின்றன.

விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் நடைபெற்று வரும் இப்போட்டிகளில் எதிர்பார்க்கப்பட்டவற்றுக்கு மாறாக அணிகள் காட்டி வரும் திறமைகள் ரசிகர்களுக்கு அரிய விருந்தாக அமைந்துள்ளது.

பல ஆண்டுகளாக போருக்கும் அதன் அனர்த்தங்களுக்கும் முகம் கொடுத்து வந்த வன்னி வாழ் மக்களுக்கும் அதன் இளைய சமூகத்தினருக்கும் இப்போட்டி சமாதானத்தின் கொடையாக அமைந்துள்ளது.


கொடிய போருக்குள்ளும் தமிழீழத்தின் விளையாட்டுத் துறையை சர்வதேச தரத்துக்கு வளர்க்க வேண்டும் என்பதில் அயராது உழைத்த தமிழீழ விளையாட்டுத்துறை தற்போதைய சமாதானத்தின் பின்னர் வடக்கு- கிழக்கு மாவட்டங்களின் பல தரப்பட்ட விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்ட தேசிய விளையாட்டுப் போட்டி ஒன்றை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கிளிநொச்சியில் நடத்தியிருந்தது.



இந் நிலையில் தற்போது நடாத்தப்பட்டு வரும் கனிஷ்ட பிரிவுப் போட்டிகள் வளர்ந்து வரும் வீரர்களுக்கு பயிற்சிக் களமாக அமைந்துள்ளது.

வடக்கு-கிழக் கில் உதைபந் தாட்டப் போட்டி என்றால் சம்பியன்கள் ஆவது மன்னார் அன்றேல் திருமலை அணியாகத்தான் இருக்கும்.

இந்த நிலையில் இம் மாவட்டங்களின் கனிஷ்ட பிரிவு அணிகளோ மிக வும் பின்தங்கிய நிலையில் இருப்பதாகவே பார்க்கப்படுகின்றது.



ஏனெனில் 17 வயதுப் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு-மன்னார் அணிகளுக் கிடையிலான போட்டியில் மட்டக்களப்பு அணி 19 கோல்களைப் போட்டு அபார வெற்றி ஒன்றைப் பெற்றது. இதில் ஸ் டொனோஸ் ரேபத்து கோல்களைப் போட்டார். இதே வேளை 13 வயதுப் பிரிவில் திருமலை அணியை எதிர்த்து ஆடிய மட்டு அணி 11 கோல்களைப் போட்டது. இவை மாவட்ட அணிகள் சம்பியன்களாக விளங்கும்போது வளர்ந்து வரும் இவ் அணிகள் ஏன் மோசமான தோல்விகளை சந்தித்தன என்ற கேள்வியை அனைவரிடமும் எழுப்புகின்றது.

இது இன்னும் ஓரிரு ஆண்டுகளில் மன்னார் திருமலை அணிகள் சம்பியன் என்ற ஸ்தானத்தை தக்கவைத்துக்கொள்வதை இயலாத ஒன்றாகவே மாற்றும் எனத் துணிந்து கூறலாம்.

இதேவேளை சுவிஸ் அணியினர் இச் சுற்றுப்போட்டியில் குறிப் பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டி வருகின்றனர். அவர்கள் கலந்து கொண்ட அனைத்துப் போட்டிகளிலும் இலகுவான வெற்றியைப் பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

சுவிஸ் அணியின் 13வயதுப் பிரிவு அணி வவுனியாவுடனான போட்டியில் 12 கோல்களைப் போட்டு வெற்றியீட்டியது. இவ் அணியில் பெண் வீராங்கனை ஒருவர் அங்கம் வகிக்கின்றார்.



இவ் வணியின் அனைத்துப் பிரிவு வீரர்களும் மைதானத்துக்குள் பிரவேசிக்கும் போது சர்வதேச போட்டிகளுக்கு வீரர்கள் தயாராவதைப் போன்று தம்மை தயார்படுத்திக் கொள்வதுடன் விளையாடும் போதும் சில வீரர்கள் தொழில் நுட்ப ரீதியான நுட்பங்களைப் பயன்படுத்தி விளை யாடுவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இது அவர்களின் உதைபந்தாட்டத் துறையில் உள்ள ஈடுபாட்டையும் உழைப்பையும் தெட்டத் தெளிவாக வெளிக் கொணர்கின்றது.

மைதானம், பந்து, காலநிலை என்பன இவர்களுக்கு முற்றிலும் வேறுபட்டதாக இருக்கின்ற போதும் மிகவும் நுட்பமாக நேர்த்தியான பந்து பரிமாற்றங்களை செய்து விளையாடுவது சர்வதேச அணி ஒன்று விளையாடுவதைப் போன்று உள்ளது. அத்துடன் அவர்கள் ஆட்டத்தின் இறுதிவரை போட்டியில் தீவிரத் தன்மையை காட்டுவதும் ஏனைய அணிகளுக்கு நெருக்கடியைக் கொடுத்துள்ளது.

வரும் 15ஆம் திகதி வரை நடைபெறப் போகும் இச்சுற்றுப் போட்டியில் இதுவரை மட்டக்களப்பு-சுவிஸ் அணிகள் முன்னணியில் திகழ்கின்ற போதும், முல்லைத்தீவு மாவட்டத்தைத் தவிர ஏனைய மாவட்டங் களின் சில பிரிவு அணிகள் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

இச்சுற்றுப் போட்டி விளையாட்டுத் துறையில் கடந்தகாலங்களைவிட தற்போது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட வளர்ந்து வரும் வீரர்கள் நுட்பங்களையும், பாடங்களையும் கற்று இன்னும் ஓரிரு ஆண்டுகளிலாவது வலுவான அணி ஒன்றை கட்டியெழுப்ப முன்வருவார்கள்?

---

# ஐரோப்பாவுக்குப் பெருமைசேர்த்த பெடரர்

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் போட்டிகள் லண்டனில் அண்மையில் நிறைவு பெற்றன.

இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில்



எதிர்பார்க்கப்பட்ட பல முன்னணி வீரர்களை வீழ்த்தி சுவிற்சர்லாந்து நாட்டின் றொஜர் பெடரும் அவுஸ்திரேலியாவின் மார்க் பிலிப்போஷிசும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகினர்.

இந்த இரண்டு வீரர்களும் இது வரை காலமும் வளர்ந்து வந்தவிதம் இவர்கள் எதிர்காலத்தில் சம்பியன்களாக வர தகுதியுள்ளவர்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது.

சம்பியனாகி 959,100 அமெரிக்க டொலரை தனதாக்கிய றொஜர்பொடர் 31 விம் பிள்டன் போட்டிகளில் தோல்வியே சந்தித் திராத பீட்ஸ்சாம்பிரசை தோற்கடித்த ஒரு வீரராக இருந்தமையால் ஒரு காலத்தில் பொடர் உலகில் முன்னணி வீரராகத் திகழத் தான் போகிறார் என்ற எதிர்பார்ப்பை ரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தார்.

இவ் எதிர்பார்ப்புக்கு அமைய உலக அரங்கில் டென்னிஸ் விளையாடுகின்ற மிகவும் திறமைவாய்ந்த வீரர்களில் ஒருவராக பொடர் கருதப்பட்ட போதிலும் அவருடைய ஆட்டம் இவ்வருடம் வரை ஒரே சீரானதாக அமைந்திருக்கவில்லை.

ஆனால் அவர் இவ்வாண்டு புல்தரை, களிமண்தரைமற்றும் கடினமான தரைகளில் அமைந்துள்ள எல்லா வகையான ஆடுகளங்களிலும் ஆடி வெற்றிபெற்று எந்த வகையான ஆட்டத்துக்கும் தயாரான ஒருவர் என்பதை நிரூபித்துக்காட்டியிருந்தார்.

இதற்கு முன்னர் கடைசியாக விம்பிள்டன் அரையிறுதிப் போட்டியில் அமெரிக்க வீரரான அன்டிரொடிக்குடன் ஆடி ஆட்டம் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்பதை அன்று வெளிப்படுத்தினார்.

அதேபோன்ற ஓர் ஆட்டத்தைத்தான் இறுதிப போட்டியிலும் பிலிப்போஷிற்கு எதிராக நிகழ்த்திக் காட்டியதுடன் வெற்றியும் பெற்றார். இவர் 7:6, 6:2,7:6 என்ற வீதத்தில் ஒரு செற்றைத்தானும் இழக்காது மூன்றே செற்களில் கோப்பையை தனதாக்கினார்.

இவரை எதிர்த்தாடிய மார்க் பிலிப்போஷிசும் ஒரு சாதாரணமானவரல்ல சேவிஸ் போடுவதில் வல்லவரான இவர் 1998இல் ஓப்பன் டென்னிஸ் போட்டி ஒன்றில் இறுதிப் போட்டிக்கு முன்னேறியவர்.

ஆனால் அடுத்த ஆண்டில் அவருடைய முழங்காலில் ஏற்பட்ட காயம் அவரை மூன்று அறுவைச்சிகிச்சைக்குத் தள்ளியதுடன் இரண்டு மாதங்கள் சக்கர நாற்காலியிலேயே நடமாட வேண்டிய நிலைக்கும் தள்ளியது. இதனால் இத்துடன் அவரது டென்னிஸ் போட்டி வாழ்க்கையே முடிந்துவிட்டது என்று அஞ்சுகின்ற நிலையை ஏற்படுத்தியது.

இந்நிலையில் தகுதிப்பட்டியலிலேயே இடம் பெற்றிராத இவர் விம்பிள்டன் போட்டிவரை முன்னேறுவாரா என்று எவரும் எதிர்பார்க்காத நிலையில் அனைவரையும் அசத்தும் வகையில் இறுதிப்போட்டிக்கு முதல் தடவையாக முன்னேறினார். இவரே தரவரிசையில் இரண்டாம் இடத்தில் உள்ள அந்ரே அகாசியை வீழ்த்தியவர்.

பட்டம் வென்ற 21 வயதான பொடர் தரவரிசையில் நான்காவது இடத்தில் உள்ளார். சுவிஸ் சரித்திரத்தில் முதற் தடவையாக விம்பிள்டன் கிண்ணத்தை சுவீகரித்த வீரர் என்ற பெருமையைப் பெற்றதுடன் நான்கு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற முதல் சுவிஸ் வீரர் என்ற பெருமையையும் பொடர் பெற்றார்.

இது 152 வருடங்களுக்குப் பின்னர் ஐரோப்பிய நாடொன்று முதற் தடவையாக விம்பிள்டன் கிண்ணத்தைச் சுவீகரித்தது குறித்து ஐரோப்பிய நாடுகள் மகிழ்ச்சி தெரிவித்ததுடன் தாய் நாடான சுவிஸ் அன்று பாரிய விழாக்கோலம் கொண்டது.

இது இவ்வாறிருக்க அன்றைய இறுதிப் போட்டி நிறைவடைந்ததும் வீரர்களும் ரசிகர்களும் காட்டிய உணர்வலைகள் விளையாட்டு ரசிகர்களிடையே போட்டியின் தன்மையை ஒரு கணம் சிந்திக்க வைத்தது.

# விசுவமடு மாதர் சங்கங்கள் சங்கமம்; எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஆராய்வு!

(விசுவமடு)

**விசுவமடுப் பிரதேச மாதர் சங்கங்களின் சங்கம நிகழ்வு நேற்றுமுன்தினம் விசுவமடு பிரதேச பெண்கள் மேம்பாட்டுத் தலைவி திருமதி காசிநாதனின் ஒழுங்கு படுத்தலில் மாலை 4 மணிக்கு விசுவமடு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.**

சங்கம நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரினை விசுவமடு பிரதேச மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் கலைவதனி ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை கிளி. மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் தமிழ்மலர் ஏற்றி வைத்தார். முதல் பெண் மாவீரர் இரண்டாம் லெப்.மாலதியின் திருவுருவப் படத் திற்கு பாடசாலை ஆசிரியை திருமதி அரசரத்தினம் ஈகச் சுடரேற்றி மலர் மாலையினை அணிவித்தார்

வரவேற்புரையினைத் தொடர்ந்து மாதர் சங்கங்களினால் பெண்கள் ஆக்க எழுச்சிப் பாடல் ஒன்று பாடப்பட்டது. தலைமை உரையினை விசுவமடு பிரதேச பெண்கள் மேம்பாட்டுத் தலைவி திருமதி. காசிநாதன் நிகழ்த்த கருத்துரையினை கிளி. மாவட்ட பெண்கள் மேம்பாட்டு பொறுப் பாளர் தமிழ்மலர், அப்பாடசாலை அதிபர் மாசிலாமணி ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து பெண்கள் அபிவி ருத்தி நிறுவன இணைப்பாளர் மைதிலியினால் நிறுவனம் பற்றிய கருத்துக்கள் வழங்கப்பட்டன.

சபையோர் கருத்துக்களைத் தொடர்ந்து சிறப்புரையினை மகளிர் அரசியல் துறையைச் சேர்ந்த கனிவிழி நிகழ்த்தினார்.

இந்த சங்கமத்தில் கடந்த காலசெயற்பாடுகள் குறித்தும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

## தீருத்தவேலை ஆரம்பம்

செம்பன்குன்று வாழ் மக்களின் நலன்கருதி உலக உணவுத்திட்டத்தின் கீழ் செம்பன்குன்று குளத்தின் திருத்த வேலை கடந்த புதன் கிழமை ஆரம்பமாகியது.

அப்பகுதி கமக்காரஅமைப்பின் கமநல உத்தியோகத்தர், பள்ளிக்குடா கிராம சேவகர், த.பொ.மே நிறுவன பிரதம இணைப்பாளர் ஆகியோர் இதனை ஆரம்பித்து வைத்தனர்.

## வள்ளிபுனம் பகுதியில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

உடையார்கட்டு வள்ளிபுனம் பகுதியில் கடந்த செவ்வாயன்று அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் திரைப்படக்காட்சியும் இடம் பெற்றுள்ளது.

உடையார்கட்டு, வள்ளிபுனம் அரசியல்துறைப் பொறுப்பாளரின் ஒழுங்கு படுத்தலில் அன்று மாலை 7.00 மணிக்கு வள்ளிபுனம் பாடசாலைக்கு அருகாக கடலோரக்காற்று, இன்னுமொரு நாடு திரைப்படக் காட்சிகளும் அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெற்றன. (11)

## -உயர்பாதுகாப்பு வலயத்தினால்- குருநகரில் 279 குடும்பங்கள் மீளக் குடியமர முடியாது அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் குருநகரின் வீதி யிலிருந்து தொடர்மாடியை அண்மித்த பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த 279 குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையில் அவதிப்படுகின்றனர்.

சிறிலங்கா இராணுவத்தினரின் உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இவர்களது வீடுகள் அமைந்துள்ளன.

இதனால் இந்தக் குடும்பங்களைத் தங்களது வீடுகளில் மீளக்குடியமர இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை. இவர்கள் வன்னிப் பகுதிகளிலிருந்து நீண்டகாலங்களின் பின்னர் தமது சொந்த இடத்துக்குத் திரும்பி வந்துள்ளனர். இருந்த போதும் இவர்கள் தங்களது வீடுகளில் குடியிருக்க முடியாமல் நண்பர்களினதும் உறவினர்களினதும் வீடுகளில் குடியிருக்கின்றனர். (33)

## காசு மாற்றுவதில் வாய்த்தர்க்கம் காசாளர் தாக்கப்பட்டார்

உடையார்கட்டு விசுவமடு றெட்பான சந்திப்பகுதியில் தேநீர் வாணிப காசாளர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது சம்பவதினம் கடைக்கு காசு மாற்றச் சென்ற ஒருவருக்கும் கடைக்காசாளருக்கும் இடையே வாய்த் தகராறு இடம் பெற்றுள்ளது.

இதனையடுத்து காசாளர் வீட்டுக்குச் சென்ற போது வழிமறித்த அந்நபர் கட்டையால் அடித்து காயப் படுத்தியதுடன் காதையும் கடித்துள்ளதாக தெரிவிக் கப்படுகிறது. இதனால் காயமடைந்த காசாளர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். (19)

## முல்லை கட்டுமானப் பணிகளுக்கு தொழில் நுட்ப அலுவலர் பற்றாக்குறை

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற கட்டுமான அபிவிருத்திப்பணிகளுக்குத் தேவையான தொழில் நுட்ப அலுவலர்கள் பற்றாக் குறை நிலவுகிறது. எனவே இம்மாவட்டத்தில் பணிபுரிய விரும்பும் தொழில் நுட்பதராதரம் உடையவர்கள் அல்லது தொழில் நுட்ப சேவையில் இருந்து இளைப்பாறியவர்கள் விண்ணப்ப மூலமோ அல்லது நேரடியாகவோ விண்ணப்பிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் கேட்டுக்கொள்கின்றார்.(20)

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட திருகோணமலை மூதூர் கிளிவெட்டி வாசியான சின்னத்துரை சுகுணதாஸ் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பூவரசங்குளப் பகுதியில் பொலிசாரின் மரணத்துக்கு காரணமாக இருந்ததோடு அவர்களுக்கு காயத்தை உண்டு பண்ணிய குற்றச் சாட்டில் இவர் கைது செய்யப்பட் டிருந்தார்.

இது தொடர்பாக திருமலை மேல் நீதிமன்றில் இடம்பெற்ற விசாரணையில் இவர் மீதான குற்றச்சாட்டுக்கள் மீளப்பெறப்பட்டமையைத் தொடர்ந்து இவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

## மாரப்பன, தயாசந்தகிரி இஸ்ரேலுக்கு விஜயம்

சிறிலங்காவின் படைத்துறை அமைச்சர் திலக்மாரப்பன இஸ் ரேலுக்கு விஜயம் செய்துள்ளார். கடந்த வியாழன் மாலை புறப்பட்ட இவருடன் கடற்படைத் தளபதி தயாசந்தகிரியும் சென் றுள்ளார்.

இவர்களது இஸ்ரேல் விஜயம் குறித்து சிறிலங்கா அரசு எதுவித செய்திகளையும் வெளியிட வில்லை. சிறிலங்கா கடற்படையிடம் தற்போது இஸ்ரேலியத் தயாரிப்பான டோராப்படகுகள் பெருமளவில் இருப்பது தெரிந்ததே.

## சிறிலங்காப் படையினரின் சம்பளத்தை அதிகரிக்க தளபதிகள் கோரிக்கை

சிறிலங்கா படையினரின் சம்பளத்தினை அதிகரிக்குமாறு சிறிலங்காவின் முப்படைத் தளபதிகள் படைத்துறை அமைச்சர் திலக் மாரப்பனவிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை படைத் துறை அமைச்சில் நடைபெற்ற விசேட சந்திப்பொன்றின் போதே முப்படைத் தளபதிகளும் கூட்டாக, இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். படைத் தளபதிகளும் இக்கோரிக் கையை பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்து, சம்பள அதிகரிப்பு தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதி அளித்துள்ளார்.

## இடம்பெயர் சேவையில் விண்ணப்பித்தோருக்கு பிறப்பு இறப்புப் பத்திரங்கள் கிளி. பதிவாளர் அலுவலகத்தில் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கடந்த எட்டாம், ஒன்பதாம் திகதிகளில் பூநகரி, கண்டாவளை, கரைச்சி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் இறப்பு மற்றும் பிறப்புப் பதிவுகளை மேற்கொண்டவர்களுக்கான பத்திரங்கள் நேற்று கிளிநொச்சி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பதிவுகளில் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 177 பதிவுகளும், பூநகரி அரச அதிபர் பிரிவில் 133 பதிவுகளும், கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 540 பதிவுகளும் என மொத்தமாக 850க்கு மேற்பட்ட பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு வழங்கப்பட்ட பிறப்பு இறப்பு அத்தாட்சிப்பத்திரங்களைப் பெறத்தவறியவர்கள் கிளிநொச்சி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் கடமை நாட்களில் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. (லோ)

## அடிப்படை வசதிகளின்றி இயங்கும் சாவகச்சேரி மாவட்ட மருத்துவமனை!

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை இன்றுவரை அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் உள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தினால் சேதமடைந்து காணப்படும் இந்த வைத்தியசாலை இதுவரை எந்தவித புனரமைப்பு வேலைகளும் திருப்திகரமாக நடைபெறவில்லை.

ஆயினும் கடந்த ஆறு மாதங்களுக்குள் 66213 பேர் இவ் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுள்ளதாக வைத்தியசாலை புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

மின்வசதிகள் அற்றும் குடிநீர் கிணறுகள் என்பன இல்லாது இயங்கிவரும் இவ்வைத்தியசாலை தென்மராட்சிப் பகுதி மக்களுக்கு ஒரேயொரு வைத்தியசாலையாக விளங்குகின்றது. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர். (33)

## கிளிநொச்சிப் பிரதேசத்தில் கசிப்பு வேட்டை தீவிரம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிப் பகுதியில் காவல் துறையினரால் கசிப்பு வேட்டை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அண்மைக்காலமாக கிளிநொச்சிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி அதிகரித்திருப்பதை அடுத்தே மேற்படி நடவடிக்கையை கிளிநொச்சி காவல் துறையினர் மேற்கொண்டுவருகின்றனர். கசிப்பு உற்பத்தி செய்யப்படும் இடங்கள் என சந்தேகிக்கப்படும் இடங்கள் யாவும் தீவிரமாக அவதானிக்கப்பட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

கசிப்பு உற்பத்தியாளர்கள் மீது தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும தற்போது அந்த நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு பலர் கைது செய்யப்படும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.(லோ)

## வித்தியானந்தாக் கல்லூரி முன் விபத்துக்கள் நேரிடும் அபாயம்!

முள்ளியவளை முல்லைத்தீவு பிரதான வீதியில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரிக்கு முன்பாக வுள்ள மதகு ஓரத்தில் பாரிய அருந்தோடிக் கிடங்கு உள்ளதால் இக்கிடங்கை தாண்டிச் செல்வோர் பெரும் ஆபத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

மதகின் ஓரமாக வீதியை அடுத்து சுமார் 10 அடி ஆழமான இவ்அருந்தோடிக் கிடங்கின் விளிம்போடு ஊர்திகளும் ஊர்திகளை எதிரெதிரே விலத்தும் மோட்டார் வண்டிகள், பாதசாரிகள், பாடசாலை மாணவர்கள் மிக அச்சத்துடனேயே தாண்டிச்செல்வதை அவதானிக்க முடிகின்றது.

இக்கிடங்கின் அருகாக செடிகள் உள்ளதால் மிக அண்மையாக சென்ற பின்னரே கிடங்கை அவதானிக்க முடிகிறது.

மாணவர்களுக்கும் போதிய வீதி ஒழுங்குகள் தெரியாது பிரதான வீதிகளிலும் 4 பேர் 3 பேர் ஒன்றாக இணைந்து செல்கின்றனர். இவ்வேளையில் ஏனைய வாகனங்கள் விலத்தும் போது பெரும்சிரமப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது.(ஆ)


### தேவை

**(விற்பனைப் பிரதிநிதி)**

**ராணி, கோம்பா சவர்க்கார உற்பத்தி நிறுவனத்திற்கு ஆர்வமுள்ள இளைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விரும்புபவர்கள் சகல அத்தாட்சிப்பத்திரங்களுடன் 14.07.03 காலை 10 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் தரவும்.**

**சிவா ரேடிங்கோ, யாழ் வீதி, கிளிநொச்சி.**

(3438)


## மனிதவள அபிவிருத்தி இயலளவை அதிகரிப்பதற்கான பயிற்சிப்பட்டறை

மனிதவள அபிவிருத்தியின் இயலளவுத்தன்மையை அதிகரிப்பதற்கான இருநாள் பயிற்சிப் பட்டறை ஒன்று நேற்றுக்காலை 10.00 மணிக்கு கிளி. அரச செயலகத்தில் போருட் நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தால் பெரும்பாதிப்புக்கள் ஏற்பட்ட பகுதிகளில் போருட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத்திட்டங்களை பன்முகப்படுத்தி சரியானமுறையில் அனைவரையும் சென்றடையும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கில் மக்களின் தேவைகளை எவ்வாறு இனங்கண்டு கொள்வது என்பது தொடர்பாகவும் மக்களுக்கு அவசியம் மேற்கொள்ள வேண்டியுள்ள வேலைத்திட்டங்கள் எவையெனத் தாம் பிரித்து எவ்வாறு மேற்கொள்ளவேண்டும் என்பது தொடர்பாகவும் மக்கள் மத்தியில் போருட் நிறுவனத்தின் வேலைத்திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் இப்பயிற்சிப் பட்டறை அமைந்துள்ளது.

மேற்படி பட்டறையில் கரைச்சி மற்றும் பூநகரிப் பிரதேசங்களைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட கிராம சேவகர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத் தக்கது. இதன் தொடர்ச்சி இன்றும் நடைபெறவுள்ளது. (லோ)

# பயணியர் பேருந்துப் புதிய பணி

## (புதுக்குடியிருப்பு, தாளையடி -பருத்தித்துறை

புதுக்குடியிருப்பு, விசுவமடு, பரந்தன், இயக்கச்சி, புதுக்காட்டுநகர், தாளையடி, பளை, பருத்தித்துறை வழித்தடத்தில் 15.07.2003 ஆம் நாளில் இருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனைப் பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

நேர ஒழுங்கு:

**புதுக்குடியிருப்பு - தாளையடி - பருத்தித்துறை**

| புதுக்குடியிருப்பு | விசுவமடு | பரந்தன் | புதுக்காட்டுநகர் | தாளையடி | முகமாலை(பளை) | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|
| காலை06.00 | 07.00 | 08.00 | 08.25 | 08.40 | 09.15 | 12.00 |

**பருத்தித்துறை - தாளையடி - புதுக்குடியிருப்பு**

| பருத்தித்துறை | முகமாலை (பளை) | தாளையடி | புதுக்காட்டுநகர் | பரந்தன் | விசுவமடு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|---|
| பகல் 01.30 | 04.15 | 04.50 | 05.05 | 05.30 | 06.30 | 07.30 |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப்பணியகம்,
புதுக்குடியிருப்பு.

(சி-8419)

# தமிழீழப் போக்குவரவுக் கழகப் பயணியர் பேருந்துப் புதிய பணி



இளமருதங்குளம், புரிசங்குளம், சேமமடுநகர், மாளிகை, புளியங்குளம் வழித்தடத்தில் 15.07.2003ஆர் நாளிலிருந்து மேற்படி பேருந்துப்பணி பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனைப் பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு:

**இளமருதங்குளம் - புளியங்குளம்**

| இளமருதங்குளம் | சேமமடுநகர் | புளியங்குளம் |
|---|---|---|
| காலை 07.00 | 07.45 | 08.00 |

**புளியங்குளம் - இளமருதங்குளம்**

| புளியங்குளம் | சேமமடுநகர் | இளமருதங்குளம் |
|---|---|---|
| காலை02.30 | 02.45 | 03.30 |

முகாமையாளர்,
கிளிநொச்சி.
தமிழீழப் போக்குவரவுக் கழகம்.

(சி-8418)

# பாடசாலைப் பேருந்துப் பணி
# தமிழீழப் போக்குவரவுக் கழகம்



முறிகண்டி, கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சி, கரடிப்போக்கு நகர் வழித்தடத்தில் 15.07.2003 ஆம் நாளிலிருந்து மேற்படி பேருந்துப்பணி பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை மாணவர், ஆசிரியர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு:

**முறிகண்டி - கிளிநொச்சி**

| முறிகண்டி | கனகாம்பிகைக்குளம் | கிளிநொச்சி |
|---|---|---|
| காலை 07.00 | 07.25 | 07.50 |

**கிளிநொச்சி - முறிகண்டி**

| கிளிநொச்சி | கனகாம்பிகைக்குளம் | முறிகண்டி |
|---|---|---|
| பகல்02.20 | 02.45 | 03.10 |

***குறிப்பு:-*** **இப்பேருந்தில் பாடசாலை மாணவர், ஆசிரியர் மட்டுமே பயணிக்கலாம்.**

முகாமையாளர்,
கிளிநொச்சி.
தமிழீழப் போக்குவரவுக் கழகம்.

(சி-8418)



## சிந்தனைக்கு

சீற்றம் கொண்ட பூகம்பத்தின் குமுறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக்குரலை சிங்கள தேசமும், சர்வதேச சமூகமும் அசட்டை செய்யமுடியாது.

தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 13-07-2003

## கடற்படையின் அடாவடி

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்ட நயினை நாகபூசணி அம்மன் ஆலய உற்சவத்தில் தேவையற்ற குழப்பமொன்றை சிறிலங்காக் கடற்படையினர் நேற்று முன்தினம் விளைவித்துள்ளனர். அதிலும் நேற்று தேர்த்திருவிழா தினமாகையால், நேற்று முன்தினமே வந்து பெருமளவு பக்தர்கள் கோயில் வளாகத்தில் திரண்டிருந்த வேளையில் அங்கு பக்தர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளால் படக்காட்சி காண்பிக்கப்பட்டுக் கொண்டிருந்தவேளை அதனை நிறுத்துமாறு வற்புறுத்தியதுடன் ஆயுதப் பிரயோகமும் செய்து மக்களை ஆத்திரமடையச் செய்திருக்கின்றனர்.

இந்த நிகழ்விலே விடுதலைப் புலிகள் படக்காட்சி காண்பித்ததை எந்தவகையிலும் தடைசெய்ய கடற்படையினருக்கு அதிகாரமில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், அரசியல் பணிகளை மேற்கொள்ளவும் மக்களுக்கு அரசியல் கருத்துக்களை வழங்கவும் புலிகளுக்குத் தடையெதுவுமில்லை. இப்பணிகளுக்காகவே போராளிகள் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தங்கியிருக்கின்றனர். இவ்வகையில் அவர்கள் படக்காட்சி காண்பித்ததை தவறென்று எவரும் சொல்லமுடியாது.

இப்படக்காட்சிகளை மக்கள் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தவேளையில் ஆயுதபாணிகளாக நுழைந்த சிறிலங்காக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு படக்காட்சியைத் தடை செய்தமையானது மக்களின் உரிமைகளை மீறும் செயலாகும்.

புலிகள் காண்பித்தபடம் அரசியல் கருத்துக்களைக் கொண்டிருந்தாலென்ன கலை பண்பாட்டு அம்சங்களைக் கொண்டிருந்தாலென்ன அதனைப் பார்வையிடும் உரிமை மக்களுக்கு உண்டு.

அதேவேளை, இவை ஆலய உற்சவத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் இது அமைந்திருக்கவுமில்லை. இது குறித்து ஆலய நிர்வாகத்தினர் முறைப்பாடு செய்யவுமில்லை. மாறாக கடற்படையினரின் அடாவடி நடவடிக்கையைத் தடுக்க முயன்ற நிர்வாகத்தினர் கூட கடற்படையினரால் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

அத்துடன் படக்காட்சி நிகழ்வை ஏற்பாடு செய்திருந்த விடுதலைப் புலிகளைக் கடற்படையினர் சுற்றிவளைத்துமுள்ளனர். கடற்படையினரின் இந்நடவடிக்கையானது, பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த அவ்வேளையில் பல விபரீத விளைவுகளுக்குக் காரணமாக அமைந்திருக்கக் கூடியதாகும்.

அதேவேளை, கடற்படையினரின் இந்நடவடிக்கைகள் குறித்து பல சந்தேகங்கள் எழுகின்றன. சிறிலங்காக் கடற்படையானது விடுதலைப்புலிகளின் கடற்பயணங்களைத் தடுக்க பல நிபந்தனைகளைப் போட்டு அவற்றுக்கு முட்டுக்கட்டை போட்டுள்ளது. புலிகளின் வணிகக் கப்பல்களை சர்வதேசக் கடற்பிரதேசத்தில் வைத்து மூழ்கடித்து, பல போராளிகளின் சாவுக்கு காரணமாகி கடற்சட்டங்களையும் போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் மீறி புலிகளையும் மக்களையும் ஆத்திரமூட்ட முயன்றுவருகிறது.

கடல்வலயத் தடைச்சட்டத்தை இறுக்கமாகக் கடைப்பிடித்து கடற்றொழிலாளர்களுக்கு பல இடையூறுகளை விளைவித்து வருகிறது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களினது வள்ளங்களையும் கடற்படையினரின் அனுமதியுடன் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களினது வள்ளங்களையும் கூட தமது கடற்கலங்களால் மோதிச்சிதைக்கிறது. அவர்களது வாழ்வாதாரங்களை அழிக்கிறது. இவ்வாறான நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் கடற்படையினர் மீது பெரும் வெறுப்புற்றுள்ளனர்.

இவ்வேளையில், மக்களை ஆத்திரமூட்டும் செயலில், அதிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு கலந்துகொள்ளும் நிகழ்வில் இவ்வாறு நடந்துகொள்வது ஒரு சதிச் செயல் என்றே கூறவேண்டும்.

இதன் மூலம் தற்போதுள்ள சமாதானச் சூழலைக் குழப்பவும் பழியைப் புலிகள் மீதும் தமிழ் மக்கள் மீதும் போடவும் கடற்படை முயல்கிறது போலவே தெரிகிறது.

கடற்படையினரின் இவ்வாறான நடவடிக்கைகளையெல்லாம் தான் கூறியே கடற்படையினர் மேற்கொள்வதாகக் கூறிவரும் சந்திரிகா நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்திற்கும் தூண்டுகோலாக அமைகின்றாரா? என்ற கேள்வியும் எழுகின்றது.

# மண்டபம் அகதிமுகாம் ஈழத்தமிழர்கள் தாயகம் திரும்புவதற்கு விருப்பம்

## துணைத் தூதரிடம் விண்ணப்பங்கள் கையளிப்பு

தமிழ்நாடு மண்டபம் அகதி முகாமில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் தாயகம் திரும்ப இலங்கைத் துணைத் தூதரிடம் விருப்பம் தெரிவித்து விண்ணப்பங்களைக் கையளித்துள்ளனர்.

தமிழ் நாட்டில் 104 முகாம்களில் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். முகாம்களிலும் வெளியிலுமாக சுமார் எண்பதாயிரம் பேர் கடந்த பல ஆண்டுகளாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தற்போது இலங்கையில் அமைதி தோன்றியுள்ளதால் அகதிகள் தாயகம் திரும்ப விரும்புகிறார்களா என்று அறிய இலங்கையின் இந்தியாவுக்கான துணைத் தூதுவர் தலைமையிலான குழு ஒன்று மூன்றுநாள் பயணமாக நேரில் சென்று அகதிகளைச் சந்தித்தது.

இக்குழுவினர் நேற்று முன்தினம் மண்டபம் முகாம் சென்று அங்குள்ள அகதிகளிடம் விண்ணப்பங்களைப் பெற்றதுடன் தாயகம் திரும்புவது குறித்தும் கேட்டறிந்தது. அவ்வேளை பெரும்பாலான அகதிகள் தாங்கள் மீண்டும் தாயகம் திரும்ப விரும்புவதாகக் கூறினர்.

# முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தியாளர் குழு மீதான விசாரணை செப்ரெம்பரில்!

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரசில் இருந்து பிரிந்து சென்ற சுபைர்தீன் உட்பட ஐந்து உறுப்பினர்களுக்கு கட்சியின் தலைமைப் பதவி,செயலாளர் பதவி,உபதலைவர் பதவிகள் வழங்கப்படுவதைத் தடைசெய்யக் கோரும் ஹக்கீம் தாக்கல்செய்த வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இவ்வழக்கில் பிரதிவாதிகளாக சுபைர்தீன் உட்பட 20 உறுப்பினர்கள் பெயரிடப்பட்டுள்ளனர்.

மேற்படி வழக்கை விசாரித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் வழக்கு முடியும்வரை இவர்கள் எதுவித பதவிகளையும் வகிக்கமுடியாத வகையில் உத்தரவிட்டது. எனினும் நிரந்தரத் தடை உத்தரவை வழங்குவது தொடர்பாகவே இவ்வழக்கு மீண்டும் வரும் செப்ரெம்பரில் விசாரிக்கப்படவுள்ளது.

# லெபனானிலிருந்து 77 இலங்கையர் வருகை பெருமளவானோர் திரும்பமுடியாது அவலம்!

லெபனானில் வேலையிழந்து இலங்கைக்குத் திரும்ப முடியாமலிருந்த இலங்கையர்கள் 77 பேர் இன்னமும் ஓரிரு தினங்களில் நாடு திரும்பவுள்ளனர்.

மேற்படி 77 பேரில் 48 பேருக்கான பயணச் சீட்டுக்களை இலங்கை வெளிநாட்டுப் பணியகம் அனுப்பிவைத்துள்ளதாக பணியகத்தின் தலைவர் சுசந்த பர்னாண்டோ தெரிவித்தார்.

மாநாடொன்றில் கலந்துகொள்வதற்காக அண்மையில் விஜயம் செய்த தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க லெபனான் சென்று இலங்கையரைத் திருப்பி அழைப்பது குறித்துப் பேச்சு நடத்தினர். இதன் பயனாகவே மேற்படி 77 பேரும் நாடு திரும்புகின்றனர்.

லெபனானின் பாதுகாப்பு ஆணையாளர் பிரிகேடியர் ஜமீல் அல் சஹீட்டின் கீழ் வைக்கப்பட்டிருந்த இலங்கையர்களே தற்போது இலங்கை வரவுள்ளனர். மேலும் ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் நாடு திரும்ப முடியாமல் உள்ளனர். படிப்படியாக இவர்களை இலங்கைக்கு அழைப்பதற்கான வேலைகளை பணியகம் மேற்கொண்டுவருகிறது.

## வரி அதிகரிப்பு

சிறிலங்காவிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்பவர்களுக்கான விமான நிலைய வரி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஐந்நூறு ரூபாவால் அதிகரிக்கப்படும்.இவ்வரி விமான நிலையத்தில அல்லாமல் விமானப் பற்றுச் சீட்டுடன் சேர்த்து அறவிடப்படும் என்று நிதியமைச்சர் கே. என் சொக்ஸி பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

## ஆழியவளை திலீபன் மருத்துவமனையில்

# அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்த மருத்துவர்களால் விசேட சிகிச்சை

அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்த மருத்துவர்களினால் ஆழியவளை திலீபன் மருத்துவமனையில் பல் வைத்தியம் உட்பட விசேட சிகிச்சைகள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை காலை 10 மணியளவில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்திற்கு டாக்டர் விமலநாதன் ஈகச் சுடர் ஏற்றிவைக்க பல்வைத்தியர் திருமதி சண்குமார் மலர் மாலையினை அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து இவ் விசேட மருத்துவ சிகிச்சையில் 400 இற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்றனர்.

# இந்திய கொக்கி அணி ஒலிம்பிக்கில் சாதிக்கும்

## இந்திய குடியரசுத் தலைவர் நம்பிக்கை

அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் இந்திய அணி வெற்றிபெறும் என்று தாம் நம்புவதாக குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற மூன்று நாடுகள் கொக்கிப் போட்டியிலும் ஸ்பெயினில் நடைபெற்ற நான்கு நாடுகள் கொக்கிப் போட்டியிலும் இந்தியா சாம்பியன் பட்டத்தை வென்றது. இதனையடுத்து போலந்தில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் கொக்கிப் போட்டியிலும் இந்தியா பங்கேற்கவுள்ளது. இதற்கான பயிற்சியில் ஈடுபட்டுள்ள இந்திய அணியினரைக் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் தமது மாளிகைக்கு அழைத்து விருந்து வழங்கிக் கௌரவித்தார். அடுத்த மாதம் நடைபெறும் போட்டிகளிலும் அடுத்த ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளிலும் இந்தியா அபார வெற்றி பெற குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் வாழ்த்தினார்.



திருமலையில் இம்மாதம் 01ம் திகதியிலிருந்து 04ம் திகதி வரை நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட மெய்வன்மைப் போட்டியில் 16வயது பிரிவில் குண்டு, தட்டு,ஈட்டி எறிதல் போட்டிகளில் அக்கராயன் மவியைச் சேர்ந்த சிவரத்தினம் தாரணி முதல் இடங்களைப்பெற்றுள்ளார்.

இவர் கடந்த வருடம் நடந்தபாடசாலைகளுக்கிடையிலான தேசிய விளையாட்டுப் போட்டியில் குண்டு தள்ளுதலில் மூன்றாம் இடத்தையும், ஈட்டி எறிதலில் 5ம் இடத்தையும் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 7 வீரர்கள் மீது குற்றச்சாட்டு

சர்வதேச டென்னிஸ் போட்டிகளில் விளையாடிய ஏழு வீரர்கள் ஊக்கமருந்து உட்கொண்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இதற்கான பொறுப்பு அவர்களின் பிரத்தியேக அதிகாரிகள் தான் என ஏ.டி.பி அறிவித்துள்ளது. இவர்கள் மீது எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படும் என்பது பற்றித் தெரியவரவில்லை.



# இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபுகள் சனாதிபதிக்கு காட்டப்பட வேண்டும்

## பொ.ஐ.மு.பேச்சாளர் சரத் அமுனுகம

(கொழும்பு)

நாட்டின் முப்படைகளுக்கும் அமைச்சரவைக்கும் தலைவியான சனாதிபதியிடம் வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக திட்ட வரைபு காண்பிக்கப்பட வேண்டும் என்று பொ.ஐ.முன்னணியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் அமுனுகம அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இடைக்கால நிர்வாக திட்ட வரைபு பற்றி தனக்கு எதுவும் தெரியாதென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தன்னிடம் கூறியுள்ளதாகவும் சரத் அமுனுகம கூறியுள்ளார்.

இதேவேளை அரசு விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைக்கவுள்ள இந்த இடைக்கால நிர்வாக திட்ட வரைபை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க வேண்டுமென சனாதிபதி பிரதமரிடம் கேட்டுக்கொண்டுள்ளமை தெரிந்ததே.

# மேஜர் முரளி உதைபந்தாட்ட மூன்றாம் நாள் போட்டி முடிவுகள்

சுவிஸ் தமிழர்களின் தாயக உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியான மேஜர் முரளி ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் நேற்று கிளி.பொது விளையாட்டரங்கிலும், கனகபுரம் மைதானத்திலும் நடைபெற்றன.

இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் ஏற்றி வைத்தார். சுவிஸ் நாட்டுப் பிரதிநிதி இன்பன் மேஜர் முரளியின் உருவப்படத்திற்கு ஈகச் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து 13வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் மட்டு. அணி கிளி. அணியை 6-0 என்ற கோல் கணக்கில் வென்றது. எய்டன் அவுஸ்கோன், நிசாந்தன் நவரட்ணராஜா ஆகியோர் தலா மூன்று கோல் போட்டனர். அம்பாறை அணி சுவிஸ் அணியை 10-1 என்ற கோல் கணக்கில் வென்றது. அம்பாறை அணியின் சார்பில் யு.றிபான் 7 கோல்களையும், ஏ.எச்.ஜாலுத் 3 கோல்களையும் போட்டனர். சுவிஸ் அணியின் சார்பில் சுகர்தன் கோல் போட்டார்.

15 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் திருமலை அணி கிளிநொச்சி அணியை 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. திருமலை அணியின் சார்பில் றஜிபுல்லா இரு கோல்களும், M.N.M.இன்சாப், பெளிடோஸ் தலா ஒரு கோல்களும் போட்டனர். கிளி அணி சார்பில் கிருஷ்ணவேள் கோல் போட்டார். அரையிறுதி ஆட்டத்தில் யாழ்.அணி வவுனியா அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. அருள்தாஸ் கோல் போட்டார்.

17 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் அம்பாறை அணி யாழ். அணியை 6-1 என்ற கோல் கணக்கில் வென்று அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. M.D. அஸ்லம் 3 கோல்களையும், A.L.M.ஆஸ்மீர், A.M.இம்ராம்சான், M.F.ஜாவித் ஆகியோர் தலா ஒருகோல்களை அம்பாறை அணியின் சார்பிலும் கி.தினேஸ்குமார் யாழ். அணியின் சார்பிலும் கோல் போட்டனர். அரையிறுதிப் போட்டியில் சுவிஸ் அணி மட்டு அணியை 7-0 என்ற கோல் கணக்கில் வென்று நாளை நடைபெறும் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியது. சீ.திவாகரன் 3 கோல்களையும், பாமிலன், பா.சுதர்சன் தலா இரு கோல்களையும் போட்டனர்.

19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் சுவிஸ் அணி கிளி.அணியை 4-2 என்ற கோல் கணக்கில் வென்று அரையிறுதிக்கு .தெரிவாகியது. சுவிஸ் அணியினர் சார்பில் கிரிசாந்த் இரு கோல்களையம், கௌசிகன், சஜீவன் ஆகியோர் தலா ஒரு கோலும் போட்டனர். கிளி.அணியின் சார்பில் சுரேஸ் இரு கோல்களைப் போட்டார். திருமலை அணியுடனான அரையிறுதிப் போட்டியில் மட்டு அணி வீரர் ஜிசிகான் 2 கோல் போட்டு தமது அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவாக வழிசமைத்தார்.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக ஜனாப் M.B.பர்ஒக் ஜனாப் A.M.இப்றாஹிம், திருவரங்கன் F.சான்டஸ், ஞானராஜ், திருக்குமார், சுரேந்திரன், சுந்தரலிங்கம், ஸ்கந்தகுமார், கணேசலிங்கம், சிறீதரன், சுரேஸ், சிவநேசன், க.புவனேந்திரராசா ஆகியோர் கடமையாற்றினர்.

இன்று நடைபெறும் அரையிறுதிப் போட்டிகளில் 13 வயதுப் பிரிவில் மட்டு-மன்னார் அணிகளும், 15 வயதுப் பிரிவில் சுவிஸ்-திருமலை அணிகளும், 17 வயதுப் பிரிவில் அம்பாறை-திருமலை அணிகளும், 19 வயதுப் பிரிவில் சுவிஸ்-மன்னார் அணிகளும் மோதவுள்ளன.

# ஆயுதங்களை கீழே வைக்குமாறு புலிகளை ஜே.வி.பி. கோருவது கேலிக்கூத்து

## அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவிப்பு

விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துப் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கூறுவது ஒரு கேலிக்கூத்தாகும் என வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பீ.ஹரிசன் கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறும்பொழுது, புலிகள் எக்காரணம் கொண்டும் ஆயுதங்களைக் கீழே வைக்கமாட்டார்கள். இது சிறு பிள்ளைகளுக்கும் தெரியும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி.யும் இன்றும் சரியானதொரு அரசியல் முடிவிற்கு வரவில்லை. தற்பொழுது இரு கட்சிகளும் தலைமைப்பீடங்களை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்ற போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் உண்மையாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி விசுவாசி அங்கத்தவர்களும், ஜே.வி.பி. விசுவாசிகளும் இக்கூட்டு ஒப்பந்தத்தை எதிர்த்து வருகின்றனர். இக்கூட்டு ஒப்பந்தம் ஒருபோதும் நிறைவேறாது என வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் கூறியுள்ளார். தமிழர்களுக்கு உரிமைகள் கொடுக்க வேண்டாம். அதற்கு நாங்கள் முழு எதிர்ப்பையும் தெரிவிக்கிறோம் எனக் கூறும் ஜே.வி.பி.யுடன் எந்த அடிப்படையில் கூட்டு ஒப்பந்தம் செய்யப் போகிறது. பல மாதங்களாக கூட்டு ஒப்பந்தம் செய்வதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி முயற்சி செய்கிறது. இன்னும் அந்த முயற்சிகள் கைகூடவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி.யும் ஒருவரை ஒருவர் குறை கூறியவண்ணம் உள்ளனர். இவர்கள் கூட்டு ஒப்பந்தம் செய்தால் ஜே.வி.பி.யினருக்கே அதிக நன்மைகள் ஏற்படும். ஜே.வி.பி.யினர் அடிக்கும் மத்தளத்திற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆடவேண்டி நேரிடும். ஆடி முடிந்த பின்பு சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாதாளக் கிடங்கில் விழப்போகிறது. கஷ்டகாலம் சுதந்திரக்கட்சிக்கு வரப்போகிறது என்றார்.

இதேவேளை பாராளுமன்றத்தில் பாராளுமன்ற விவகார அமைச்சர் எம்.எச்.எம்.அஸ்வரை நோக்கி எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், புத்தளம் கழுதை, விசர் பிடித்தவன் என பாராளுமன்றத்தில் கோஷமிட்டனர்.

சர்வதேச பாதுகாப்புச்சபை அமைப்பதற்கு அரசு தற்பொழுது நடவடிக்கை எடுத்து அதை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 10ம் திகதி பாராளுமன்றத்தில் ஜே.வி.பி.பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச உடனடியாக அரசு இராஜினாமா செய்ய வேண்டும் எனக் கூறினார். அப்பொழுது எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அரசு பயந்து நித்திரை செய்கிறது. பயத்தினால் அமைச்சர்கள் ஓடிவிட்டனர் எனப் பாராளுமன்றத்தில் உரத்தகுரலில் கோஷமிட்டனர். அப்பொழுது பாராளுமன்றத்தில் கலரி ஆசனத்தில் கல்லூரி மாணவர்களும் பார்வையாளராக இருந்தனர். அத்தருணத்தில் பாராளுமன்றத்தில் அரச சார்பில் அமைச்சர் அஸ்வர் மாத்திரமே இருந்தார். அப்பொழுது மாணவர்களை அமைச்சர் பார்த்து, ஜே.வி.பி.யின் நல்ல ஒழுக்கங்களைப் பார்த்தீர்களா? என்று கூறினார்.

# வட-கிழக்கிலுள்ள சிங்களவரின் உரிமைகள் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## - ம.ஐ.மு.தலைவர் தினேஸ் குணவர்த்தன

(கொழும்பு)

வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகத் திட்டவரைபை சமர்ப்பிக்க முன்னர் அங்குள்ள சிங்கள மக்களின் உரிமைகளை அரசாங்கம் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தன கூறியுள்ளார்.

இந்த இடைக்கால நிர்வாகத் திட்டவரைபில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக சனாதிபதி உட்பட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மக்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். ஜே.வி.பி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகியவற்றுடன் தற்போதைய அரசியல் நிலை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, ஊழல் மற்றும் அரசியல் படுகொலைகள் குறித்து கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# சிறிலங்காப் படையினரின் தேடுதல்களை அனுமதிக்க முடியாது

## மட்டு-அம்பாறை துணை அரசியல் பொறுப்பாளர்

(மட்டக்களப்பு)

சிறிலங்காப் படையினரின் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாதென விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனையில் படையினர் நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலை சுட்டிக்காட்டியுள்ள துணைப்பொறுப்பாளர், போர்நிறுத்த சூழலில் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளை நடத்தப் படையினர் முற்படுவது மக்கள் மத்தியில் அச்சத்தையும், பதற்றத்தையும் ஏற்படுத்தும் என்றும், இதனைப் படைத்தளபதிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை, இருதயபுரம், பேத்தாளை ஆகிய பகுதிகளுக்கு நேற்று அதிகாலை சென்ற சிறிலங்காப் படையினர் சுற்றிவளைப்புத் தேடுதலை நடத்த முற்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# - மட்டக்களப்பு மாவட்ட - தமிழ் – முஸ்லிம் உபகுழுவின் மாவட்டக் கூட்டம் செவ்வாய்க்கிழமை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் முஸ்லிம் உபகுழுவின் மாவட்டக் கூட்டம் வரும் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு வவுணதீவு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மட்டு- அம்பாறை சிறப்புத் தளபதி றமேஸ், மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோர் தலைமையில் விடுதலைப்புலிகள் குழுவினரும், பிரதி அமைச்சர் சேகுதாவூத் தலைமையில் முஸ்லிம் குழுவினரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள முஸ்லிம் மக்களின் வயல்களைப் பயன்படுத்துவதில் இதுவரை தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்பாக இக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

# தேசிய விளையாட்டு விழா செப்ரெம்பருக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் அடுத்தமாதம் 5ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை நடைபெறவிருந்த சிறிலங்காவின் 29ஆவது தேசிய விளையாட்டு விழா செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டிருக்கின்றது.

துரையப்பா விளையாட்டரங்கில் மேற்கொள்ளப்படும் நிர்மாணப் பணிகள் குறித்த காலத்தில் நிறைவு பெறாது என்பதால் விளையாட்டு விழாவை பின்போட்டதாக விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் நாயகம் மில்டன் அமரசிங்க கூறியுள்ளார்.

அடுத்தமாத நடுப்பகுதியில் உலக மெய்வல்லுநர் போட்டி நடைபெறுவதால் சிறிலங்கா வீரர்களும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

# பாடசாலைகளில் பரீட்சை நடாத்த ஆசிரியர் குழு அமைக்க முடிவு

பாடசாலைகளில் பரீட்சைகளை நடாத்த ஆசிரியர் குழு ஒன்றை அமைப்பதென கல்வித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

தகைமையுடைய ஆசிரியர்கள் இக் குழுவிற்கு விண்ணப்பிக்கலாம். பரீட்சைகளை நடாத்துவதற்கான ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் போது அரசியல் அச்சுறுத்தல்கள், நீதியீனங்கள் ஆகியன இடம்பெறுவதாகப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளமையைத் தொடர்ந்து அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு இத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

ஆசிரியர்கள் குழுவில் சேர்ந்து கொள்வதற்கான விண்ணப்பங்களை வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய உறுப்பினர் நியமனம்

பேராசிரியர் வெஸ்கோதுஷாதினி கொல்வின் குணரட்ண அரசியல் அமைப்புப்பேரவையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனத்தைச் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வழங்கியுள்ளார். அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினராக இருந்த சனாதிபதி சட்டத்தரணி எச்.என்.டி. சில்வா இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்தே இந்த நியமனம் வழங்கப்பட்டதாக சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

## கொழும்பில்...

ட்டுள்ளதாகவும் பிரதி பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார்.

இத்தேடுதல் நடவடிக்கையின் போது இரண்டு துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன. படையினரும் பொலிசாரும் தொடர்ந்து ரோந்து நடவடிக்கையிலீடுபட்டு வருகின்றனர். அத்துடன் பல இடங்களில் வீதித்தடைகளை ஏற்படுத்தி சோதனைகளையும் நடத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## கடற்படையால்...

* மேஜர் நிமால்/நிமல் (துங்கராசா செல்வக்குமார், பரந்தன், கிளிநொச்சி, த.மு.1ஆம் கட்டை, சோமர்கமம் பரந்தன், கிளிநொச்சி.)

* மேஜர். மணியரசன் (முத்துலிங்கம் லவக்குார், வின்சன்வீதி, நெடுங்கேணி.)

* மேஜர்.வீரநாதன் (தியாகராசா தயாநிதி, மேழிவனம், முல்லைவீதி, மாங்குளம்.)

* கப்டன் செழியன்/அன்புவெற்றி (சொக்கலிங்கம் ஜெகன் உதயநகர்மேற்கு, செல்வாவீதி, கிளிநொச்சி.)

* நாட்டுப்பற்றாளர் மோகன் (நாரந்தனை, ஊர்காவற்றுறை த.மு. தேவிபுரச்சந்தி, புதுக்குடியிருப்பு.)

இவர்களுக்கு தமிழீழவிடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## ஆரோக்கியமான...

மாணவ சமூகம் தான் நாளைய தமிழர் தாயகத்தில் சிறந்தவர்களாக விளங்கவும் செயற்திறன் மிக்கவர்களாக உழைக்கவும் கல்விச் சமூகத்தினர் பாடுபடவேண்டும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## பாராளு. செல்லும்...

சடங்கிற்கான பொருட்களை எவ்வாறு பாராளுமன்றத்திற்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள் என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இதனால் சபாநாயகர் இவற்றைத் தடுக்க பொலிஸ்மா அதிபர்களின் சிபார்சுகளைக் கேட்டிருந்தார்.

இதற்கமைய பொலிஸ்மா அதிபரின் சிபார்சுகள் சபாநாயகருக்கும் சட்டமா அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

பொலிஸ் அதிகாரிகள் பாராளுமன்ற உறுப்பினர்களை அச்சமின்றி விருப்பு வெறுப்போ இன்றி சோதனையிடவேண்டும். அரசியல்வாதிகள் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி இடமாற்றம் செய்துவிடுவார்கள் என்றோ அல்லது வேறேதாவது நடவடிக்கை எடுப்பார்கள் என்றோ அஞ்சத் தேவையில்லை. ஏனெனில் பொலிசாரின் இடமாற்றம் இப்பொழுது சுயாதீனமான பொலிஸ் ஆணைக்குழுவின் வசம் உள்ளது என பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.